# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் துறை

**அனுப்புதல் :-**

திரு.சி.பழனி.பி.டெக்.,
நகராட்சி பொறியாளர்(பொ) மற்றும்
ஆணையாளர் (பொ),
திண்டிவனம் நகராட்சி.
திண்டிவனம்-604 001.
Cell no: 7397389326
Email:commr.tindivanam@tn.gov.in

**பெறுதல் :-**

நகராட்சி நிர்வாக இயக்குநர் ,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-600028.

**வழி:-**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
வேலூர்-12.

**ந.க.எண்.1365/2022/சி3,** **நாள் : 13.09.2024**

அய்யா,

பொருள்:- நகர மன்ற தீர்மானங்கள்- திண்டிவனம் நகராட்சி - **செப்டம்பர்-2024ஆம்** மாத நகரமன்ற தீர்மானங்கள் நகலினை அனுப்பி வைத்தல் - தொடர்பாக.

பார்வை:- நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்-12 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.1608/2022/அ1, நாள்.03.06.2022.

*******

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் சுற்றறிக்கையில் உள்ளவாறு, ஒவ்வொரு மாதமும் நிறைவேற்றப்படும் அவசரம் / சாதாரணம் / சிறப்புக்கூட்டங்களின் நகர மன்ற தீர்மான நகலினை நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகராட்சியில் 10.09.2024இல் நடைபெற்ற **செப்டம்பர்-2024ஆம்** மாத சாதாரணம் மற்றும் அவசரக் கூட்ட தீர்மான நகல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் நகராட்சி வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

13/9/2024

**ஆணையாளர்(பொ),**
**திண்டிவனம் நகராட்சி.**

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், விழுப்புரம். 13/9/2024

# திண்டிவனம் நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

## முன்னிலை : திருமதி.ஆர்.நிர்மலா., நகர மன்ற தலைவர்.

10.09.2024 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற உள்ள நகர மன்ற சாதாரணக் கூட்டப் பொருள் விபரம்.

| வ. எண் | பொருள் விபரம் |
|---|---|
| 1 | திண்டிவனம் நகராட்சியின் வருவாய் பிரிவின் குத்தகை இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 31.07.2024ம் தேதி அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. |

| வ.எண் | குத்தகை பொது ஏல உரிம இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் | 31.07.2024 கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஆடுவதை செய்யுமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திருமதி. M.சுலோச்சனா 36, மாரியம்மன் கோயில் தெரு, ரோஷணை திண்டிவனம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.30000/– | குறைவு |
| | | திரு.K.குமார் 6/9 தொப்பையன் தெரு திண்டிவனம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.31110/– | அதிகம் |
| 2 | நேரு வீதியில் ஒ.பி.ஆர் பூங்கா அருகில் கட்டப்பட்டுள்ள கீழ்க்கண்டுள்ள கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்<br>அ) மீன் கடைகள்–8 எண்ணிக்கை<br>ஆ)கறிக்கடைகள் –8 எண்ணிக்கை<br>இ)காய்கறி கடைகள் 8 எண்ணிக்கை | திருமதி. M.சுலோச்சனா 36, மாரியம்மன் கோயில் தெரு, ரோஷணை திண்டிவனம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,69,100/– | அதிகம் |
| | | திரு.K.குமார் 6/9 தொப்பையன் தெரு திண்டிவனம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,69,000/– | குறைவு |
| 3 | நகராட்சி சேர்மன் வைத்தியலிங்க முதலியார் காய்கறி நாளாங்காடி கடை எண் 14 முதல் 36 முடிய கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திருமதி.M. சுலோச்சனா 36, மாரியம்மன் கோயில் தெரு, ரோஷணை திண்டிவனம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,20,000/– | குறைவு |
| | | திரு.K.குமார் 6/9 தொப்பையன் தெரு திண்டிவனம் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,40,000/– | அதிகம் |

| | |
|---|---|
| | மேலும் குத்தகை இனங்களின் மீதான வருவாயை கருத்தில் கொண்டும் நிதி ஆதாரத்தினை எதிர்நோக்கியும் ஆணையர் அவர்களின் குறிப்பில் தெரிவித்துள்ளவாறு கீழ்க்குறிப்பிட்டுள்ள வரிசை எண் 1 மற்றும் 2ல் கண்டுள்ள இனங்களை நகராட்சி குத்தகை விதிகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்படைப்பு செய்வதற்கு மேல் நடவடிக்கை தொடரவும், மற்றும் வரிசை எண் 3ல் மூன்றாண்டு சராசரியை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்று உள்ளதால் மறு ஏலம் மற்றும் மறு ஒப்புந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1) குத்தகை இனங்களின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வரிசை எண் 1 மற்றும் 2ல் கண்டுள்ள இனங்களுக்கு வேலை உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2) வரிசை எண் 3ல் கண்டுள்ள இனத்தின் மூன்றாண்டு சராசரியை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றதால் மறு ஏலம் மற்றும் மறு ஒப்புந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4835/2017/அ1)<br>**தீர்மான எண் : 171 நாள் : 10.09.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 2 | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி வார்டு எண்.10, நகரளவை வார்டு-B, பிளாக்.2, T.S.No.28/6C, வார்டு -B, பிளாக்.10, T.S.No.1/5-ல் 6.00 ஏக்கர் பரப்பளவில் புதியதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டம் அனைத்து ரெட்டி(கஞ்சம்) நலச்சங்கம் மனு நாள்.29.01.2024-ல் மண்ணின் மைந்தர் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் "உத்தமர் ஓமந்தூரார் பெ.ராமசாமி ரெட்டியார்" அவர்களின் பெயர் சூட்ட வேண்டும் என அச்சங்கத்தில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. என இப்பொருண்மை குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2766/2024/டிபி1, நாள்.31.01.2024-ல் அரசின் அனுமதி வேண்டி நகர்மன்றத்தின் தீர்மானம் வைக்க அரசு கடித எண்.1417, நநி5(2)/2024 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.08.2024-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அரசாணை (நிலை)எண்.98, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.07.2024-ல் அறிவுறுத்தியபடி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 189-ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.14409/2022/டிபி1, நாள்.31.05.2022-ன் படியும் அரசு கடித எண்.1417/நநி.5(2)/2024-1, நாள்.01.08.2024-ன்படி அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளதாலும் இந்நகராட்சியில் புதியதாக கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்திற்கு மண்ணின் மைந்தர் சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் "உத்தமர் ஓமந்தூரார் பெ.ராமசாமி ரெட்டியார்"அவர்களின் பெயர் சூட்டிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2569/எப்1/2024)<br>**தீர்மான எண் : 172. நாள் : 10.09.2024**<br>**நகரமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையான கருத்தின்படியும், நகரமன்ற தலைவர், நகரமன்ற துணைத்தலைவர் மற்றும் பெரும்பான்மையான நகரமன்ற உறுப்பினர்களின் கருத்தினை ஏற்று மேற்படி தீர்மானத்தை நிராகரிக்கப்பட்டது** |

3 இந்நகராட்சி பொது மக்களின் நலன்கருதி நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கிணங்க பின்வரும் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே பின்வரும் பணிகளுக்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி மற்றும் கல்வி நிதி 2024-2025ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| | வருவாய் நிதி – 2024-2025 | |
| 1 | வார்டு எண்.04 முனியன் தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 3.00 |
| 2 | வார்டு எண்.10, TMG நகரில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 4.00 |
| 3 | வார்டு எண்.18, அழகப்பா தெருவில் சிறுபாலம் அமைத்தல் பணி. | 1.50 |
| 4 | வார்டு எண்.26, நாகலாபுரம் மெயின் ரோட்டில் அரசமரம் அருகே சிறுபாலம் அமைத்தல் பணி. | 3.00 |
| 5 | 2024-2025 வடகிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மழைகாலங்களில் சாலைகளில் ஏற்படும் மேடு பள்ளங்களை தேவைக்கேற்ப கிராவல் மண் கொண்டு நிரப்புதல் பணி. | 9.80 |
| 6 | 2024-2025 வடகிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வார்டு எண்.1, முதல் 33 வரையிலான பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால், கல்வெட்டுகள்(சிறுபாலம்) மற்றும் வெள்ளவாரி வாய்க்கால் ஆகிய இடங்களில் ஜேசிபி இயந்திரம் மூலம் தூர்வாருதல் பணி. | 9.80 |
| 7 | 2024-2025 வடகிழக்கு பருவமழை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மணல் மூட்டைகள், தளவாடப் பொருட்கள் வாங்குதல் பணி. | 3.00 |
| | **மொத்தம்** | **36.10** |
| | கல்வி நிதி – 2024-2025 | |
| 8 | வார்டு எண்.30, கிடங்கல்-1, நகராட்சி இந்து பள்ளியில் கழிவறை பழுது மற்றும் பராமரித்தல் பணி. | 2.00 |
| | **மொத்தம்** | **2.00** |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 3745/2023/இ1)

**தீர்மான எண் : 173 நாள் : 10.09.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

| 4 | இந்நகராட்சியில் **பள்ளி மேம்பாட்டு மானிய நிதி இயக்குதல் மற்றும் பராமரித்தல் 2024-2025 Phase-I-ன்** கீழ் 14.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது. |
|---|---|

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | காவேரிப்பாக்கம் நகராட்சி மேல்நிலை பள்ளியில் பெண்கள் கழிவறை அமைத்தல் பணி. | 8.00 | **M/s.Thulasi Construction,** No.311, Nehru Street Poonthottam, Tindivanam. | - | -0.15 | **M/s.Thulasi Construction,** No.311, Nehru Street Poonthottam, Tindivanam. |
| | | | **M/s.Abitha Constructions,** No.33B, Pillaiyar Kovil Street, Vettaikaranpatti. | +0.37 | - | |

<u>அலுவலக குறிப்பு :-</u>

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.1480/2024/இ2)

**தீர்மான எண் : 174 நாள் : 10.09.2024**

**அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது**

| 5 | இந்நகராட்சியில் **குடிநீர் நிதி - 2024-2025**ன் கீழ் 21.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
|---|---|

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | வார்டு எண்.1 முதல் 33 வார்டுகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கு தேவையான உதிரி பாகங்கள் வாங்கி பொருத்தும பணி. | 5.00 | M/s KS & Co | - | -0.05 | M/s KS & Co, Kooteripattu. |
| | | | M/s T.D.R & Co | +1.01 | - | |

<u>அலுவலக குறிப்பு :-</u>

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் 7ல் கண்டுள்ளவாறு குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3745/2024/இ2)

**தீர்மான எண் : 175 நாள் : 10.09.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

6

இந்நகராட்சியில் 14.08.2024, 16.08.2024 மற்றும் 22.08.2024-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | **பள்ளி மேம்பாட்டு மானிய நிதி அடிப்படை கட்டமைப்பு 2024-2025 Phase-I** (SFC – School Improvement Grant – Infrastructure Works – Phase – I) | | | | | |
| 1 | காவேரிப்பாக்கம் மேல்நிலைப்பள்ளியில் கூடுதலாக நான்கு வகுப்பறை மற்றும் ஆய்வகக் கட்டிடம் கட்டும் பணி. | 130.00 | **Thulasi Construction,** No.311, Nehru Street Poonthottam, Tindivanam. | - | -0.14 | **Thulasi Construction,** No.311, Nehru Street Poonthottam, Tindivanam. |
| | | | **Abitha Constructions,** No.33B, Pillaiyar Kovil Street, Vettaikaranpatti. | +1.01 | - | |
| 2 | ரோஷனை இந்து ஆரம்ப பள்ளியில் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் பணி. | 24.00 | KS&Co, No.13, Krishna Nagar, 2nd Cross Street, 1st Floor, Kutteripattu. | - | -0.00 | KS&Co, No.13, Krishna Nagar, 2nd Cross Street, 1st Floor, Kutteripattu. |
| | | | Naveen Constructions, No.17, Palla Street, Vengathur Villa. | +0.85 | - | |
| | **கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் - 2024-2025** (Kalaignar Nagarpuram Mempattu Thittam – 2024-2025) | | | | | |
| 1 | அவரப்பாக்கம் ஏரியை மறு சீரமைத்தல் பணி வார்டு எண்.1,D, சர்வே எண்.2 | 145.00 | **TDR&Co,** No.14, Wahab Nagar, Tindivanam | - | -0.00 | **TDR&Co,** No.14, Wahab Nagar, Tindivanam. |
| | | | **Sairam Constructions,** No.18, Gopal Street Extension, N.K.Nagar, Tindivanam. | +8.93 | - | |
| 2 | பழைய நகராட்சி அலுவலக வளாகம் இடத்தில் வணிக வளாகம் (Commercial Complex) கட்டுதல் பணி வார்டு எண்.A, சர்வே எண்.142 | 77.00 | **S.K.N Construction,** No.30, Murugan Nagar, | - | -0.09 | **S.K.N Construction,** No.30, Murugan Nagar, By-Pass Road Vada Alapakkam, Tindivanam. |
| | | | **Dharani Constructions,** No.1/90, Vadasiruvalur, Vellimedupettai. | +1.00 | - | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | வார்டு எண்.6, அண்ணா தெரு, சிறுவர் விளையாட்டு பூங்கா பூங்கா அமைத்தல் பணி. | 11.00 | KS&Co, No.13, Krishna Nagar, 2nd Cross Street, 1st Floor, Kutteripattu. | – | −0.10 | KS&Co, No.13, Krishna Nagar, 2nd Cross Street, 1st Floor, Kutteripattu. |
| | | | Naveen Constructions, No.17, Palla Street, Vengathur Village. | +1.03 | – | |
| | <u>மூலதன மானிய நிதி (CGF) இயக்கம் மற்றும் பராரித்தல் நிதி (O&M) 2024−25 (Phase−II)</u><br>Capital Grant Fund & Operation and Maintenance Deficit Grant Fund 2024−25 (Phase II) | | | | | |
| 1 | வார்டு எண்.22, எம்.ஜி.ஆர் தெரு, ஆடு வதை செய்யுமிடம் பழுது மற்றும் பராமரித்தல் பணி. | 14.00 | KS&Co, No.13, Krishna Nagar, 2nd Cross Street, 1st Floor, Kutteripattu. | – | −0.07 | KS&Co, No.13, Krishna Nagar, 2nd Cross Street, 1st Floor, Kutteripattu. |
| | | | Naveen Constructions, No.17, Palla Street, Vengathur Village. | +1.03 | – | |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.1480/ 2024/இ1)

**தீர்மான எண் : 176 நாள் : 10.09.2024**

**அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது**

7 இந்நகராட்சியில் வருவாய் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பின்வரும் விவரப்படி தேவையான தளவாடப்பொருட்கள் வாங்கி பொருத்தும் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேசை மற்றும் நாற்காலிகள் (4+4 எண்ணிக்கைகள்), நகரமன்ற கூட்ட பொருள் வாசிப்பு மரத்தாலான மேடை. (Podium) (மைக் மற்றும் விளக்குடன்) மற்றும் 1.5 டன் குளிரூட்டி சாதனம் (5 எண்ணிக்கைகள்) போன்ற தளவாடப்பொருட்கள் வாங்கி பொருத்தும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதி 2024−2025ன் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1480/ 2024/இ1)

**தீர்மான எண் : 177 நாள் : 10.09.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது**

8 இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்கள் அனைத்தும் வார்டு மறுவரையறை செய்யப்பட்டதால் வார்டு எண். 1 முதல் 33 வரை உள்ள தெருக்கள் மற்று புதியதாக சேர்க்கப்பட்டுள்ள தெருக்களுக்கு பெயர் பலகை (Sign Board) அமைக்கப்பட வேண்டும் என நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததின் பேரில் முதல் கட்டமாக பிரதான தெருக்களுக்கு பெயர் பலகை அமைக்க ரூ.9,90,000/−க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூராயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1480/ 2024/இ1)

**தீர்மான எண் : 178 நாள் : 10.09.2024**

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது**

| | |
|---|---|
| 9 | திண்டிவனம் நகராட்சி வார்டு எண்.15 பாரதிதாசன் பேட்டை, வார்டு எண்.28 வள்ளலார் தெரு, குறுக்கு தெரு கன்னியான் குட்டை பார்க் எதிரில் மற்றும் வார்டு எண்.09 மூங்கிலம்மன் கோயில் தெரு கழிவறை ஆகிய மூன்று இடங்களில் உள்ள மின்மோட்டார்கள் பழுதடைந்த காரணத்தால் ஆழ்துளை கிணற்றிலிருந்து மோட்டார்களை வெளியில் எடுத்து பிரித்து பார்த்ததில் மோட்டார்கள் மிகவும் பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி இடங்களில் மூன்று 1.0HP நீர் மூழ்கி மோட்டார்கள் புதியதாக வாங்கி பொருத்தவும் லேபர் கட்டணம் உட்பட தோராய செலவினம் ரூ.95000/-ஐ குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2606/2024/இ2)<br>**தீர்மான எண் : 179 நாள் : 10.09.2024**<br>**<u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது.</u>** |
| 10 | அரசாணை (நிலை) எண்.2, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் [MA-3(2)] துறை, நாள்.03.01.2020. ரூ.268.00 இலட்சம் மதிப்பீட்டில் திண்டிவனம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்திற்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்ட (IUDM) நிதி ரூ.67.00 கோடி மதிப்பீட்டில் HUDCO கடன் தொகை ரூ.174.20 கோடி, நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.26.80 கோடியும் ஆக மொத்தம் ரூ.268.00 கோடிக்கு செயல்படுத்த நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. HUDCO கடனாக தொகை ரூ.56.97 கோடி TUFIDCO நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. அரசாணை எண்.438, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-3) துறை, நாள்.05.08.2024ல் திண்டிவனம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்திற்கு வரவேண்டிய ரூ.117.23 கோடி HUDCO கடன் இரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாக TUFIDCO தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி நிறுவனம் லிமிடெட் மூலம் State Urban Infrastructure Development Fund (SUIDF) நிதியின் கீழ் மீதம் உள்ள தொகை ரூ.117.23 கோடி கடனாக ஒதுக்கீடு செய்து இத்திட்டத்தினை செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.TUFIDCO நிபந்தனைகள் மற்றும் வரையரைக்கு ஒப்புதல் அளிக்கவும், மேலும் கடன் உதவிதொகை பெற கடன் பத்திரம் மற்றும் அதற்கான அனைத்து ஆவணங்களிலும் நகராட்சி சார்பாக நகராட்சி ஆணையர் கையொப்பமிட ஒப்புதல் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. Resolved that the Tindivanam Municipality is authorised to borrow a loan amount of **Rs.117.23 Crore** for " Under Ground Sewage Scheme as TUFIDCO" from Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO), under State Urban Infrastructure Development Fund (SUIDF), as per the terms and conditions prescribed by TUFIDCO and G.O.(D)No.438, Dt.05.08.2024.<br>2. Resolved that the Tindivanam Municipality is hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Tindivanam Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Tindivanam Municipality.<br>3. Resolved that the Tindivanam Municipality bank account on the revenue collection such as property tax, professional tax and other revenue |

| | |
|---|---|
| | collections shall be escrowed / to the extent of quarterly / monthly repayment commitment in favour of TUFIDCO. This exclusive escrowed account will be in existence till the time of clearing the loan and all other dues under this project to TUFIDCO.<br>4. Resolved that the Commissioner be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget of the Tindivanam Municipality for the repayment of principal, interest and other monies due for the loan availed for this project proposal to TUFIDCO.<br>5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Tindivanam Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the Government, in the event of default in repayment of principal, interest and other monies due to TUFIDCO in respect of loans availed for this project.<br>6. The Tindivanam Municipality shall submit an undertaking stating that if for any reason, the projected increase in property tax, professional tax etc., could not be implemented, the short fall if any arising in any period shall not affect the timely repayment of its dues to TUFIDCO and in such case the Government may be permitted to deduct the said dues out of the SFC funds on the first priority basis.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>**மன்றம் அனுமதிக்கலாம்**<br>(ந.க.எண்.3478/2017/இ2)<br>**தீர்மான எண் : 180 நாள் : 10.09.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 11 | திண்டிவனம் நகராட்சி வார்டு எண்.24 கோபாலபுரம் கந்தசாமி தெரு விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதி ஆகும் 15 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்புகள் இருந்து வருகிறது. மேற்படி பகுதியில் குடிநீர் வசதி இல்லாமல் உள்ளது அப்பகுதியில் குடிதண்ணீர் வசதி செய்து தர நகரமன்ற உறுப்பினர் கேட்டுள்ளார். எனவே மேற்படி பகுதியில் புதியதாக சின்டெக்ஸ் உடன் ஆழ்துளை கிணறு அமைத்து குடிதண்ணீர் வசதி செய்யவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.230000/-ஐ குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி பணிக்கு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 2645/2024/இ2)<br>**தீர்மான எண் : 181 நாள் : 10.09.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | |
|---|---|
| 12 | திண்டிவனம் நகராட்சி வார்டு எண்.19 நேரு வீதி பழைய கோர்ட் அருகில் உள்ள நம்ம டாய்லட்க்கு தண்ணீர் வசதி இல்லாததால் பயன்பாடு இல்லாமல் உள்ளது தண்ணீர் வசதி செய்து தர கோரி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது எனவே மேற்கண்ட நம்ம டாய்லட்க்கு தண்ணீர் வசதி செய்ய புதிய ஆழ்துளை கிணறு மோட்டார் அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.200000/-ஐ குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி பணிக்கு குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 2647/2024/இ2)<br>**தீர்மான எண் : 182 நாள் : 10.09.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 13 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு காட்ராம்பாக்கம் தலைமை நீரேற்றும் நிலையம், ரெட்டணை தலைமை நீரேற்றும் நிலையம் மற்றும் இறையானூர் நீருந்தும் நிலையத்திலிருந்து குடிநீர் வினியோகிக்க தனியார் மூலம் ஒப்பந்த முறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.34.10/-க்கு (ரூபாய் முப்பத்தி நான்கு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) செயல்படுத்த ந.ம.தீ.எண் : 211 நாள் : 21.06.2021 ல் அனுமதி பெறப்பட்டு உரிய அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் ந.க.எண் : 3294/2021/DO1-1/ நாள் : 06.07.2021 மூலம் Principle Clearance வழங்கப்பட்டும், முதல் ஆண்டிற்கு மதிப்பீட்டு தொகை ரூ.33.90/- இலட்சத்திற்கும், இரண்டாம் ஆண்டிற்கு மதிப்பீட்டு தொகை ரூ.35.60/- இலட்சத்திற்கும் மற்றும் மூன்றாம் ஆண்டிற்கு மதிப்பீட்டு தொகை ரூ.37.38/- இலட்சத்திற்கும் தொழில் நுட்ப அனுமதி வழங்கியும் கடிதம் வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி பணிக்கு 05.08.2021 வரை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய எம்/எஸ். கிரீன் அக்ரோ என்விரோன்மன்ட் சர்வீஸ், எண்.66, தண்டலம், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். நிறுவனத்திற்கு நகர மன்ற தீர்மான எண். 146, நாள். 28.07.2023ல் அனுமதிக்கப்பட்டு 01.09.2023 முதல் 31.08.2024 வரை வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது முடிவடைந்துள்ளது<br>எனவே, தற்போது (01.09.2024 முதல் 30.11.2024 வரை) மதிப்பீட்டு தொகை ரூ.9.36/- இலட்சத்திற்கு எம்/எஸ். கிரீன் அக்ரோ என்விரோன்மன்ட் சர்வீஸ், எண்.66, தண்டலம், மதுராந்தகம் தாலுக்கா, செங்கல்பட்டு மாவட்டம். நிறுவனத்தின் 05.08.2021 தேதிய குறைந்த ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் -0.07% க்கு பணியின் அவசர அவசியம் கருதி கால நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் |

| | |
|---|---|
| | அனுமதிக்கலாம்<br>3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1504/2021/இ2)<br>**தீர்மான எண் : 183 நாள் : 10.09.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 14 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு கண்ரக்கோட்டை தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து குடிநீர் வினியோகிக்கும் பணியினை தனியார் மூலம் ஒப்பந்த முறையில் பராமரிப்பு பணிகள் மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.24.25/–க்கு (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) செயல்படுத்த ந.ம.தீ.எண் : 212 நாள் : 21.06.2021ல் அனுமதி பெறப்பட்டு உரிய அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் ந.க.எண் : 3294/2021/D01–2/ நாள் : 06.07.2021 மூலம் Principle Clearance வழங்கப்பட்டும், முதல் ஆண்டிற்கு மதிப்பீட்டு தொகை ரூ.24.05/– இலட்சத்திற்கும், இரண்டாம் ஆண்டிற்கு மதிப்பீட்டு தொகை ரூ.25.25/– இலட்சத்திற்கும் மற்றும் மூன்றாம் ஆண்டிற்கு மதிப்பீட்டு தொகை ரூ.26.52/– இலட்சத்திற்கும் தொழில் நுட்ப அனுமதி வழங்கியும் கடிதம் வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி பணிக்கு 05.08.2021 வரை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் திரு.கே.இராஜகோபாலன், எண்.20, இராகவனார் தெரு, செங்கல்பட்டு–1. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டு –0.17% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை நகர மன்ற தீர்மான எண். 147, நாள். 28.07.2023ல் அனுமதிக்கப்பட்டு 01.09.2023 முதல் 31.08.2024 வரை வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது முடிவடைந்துள்ளது<br>எனவே, தற்போது (01.09.2024 முதல் 30.11.2024 வரை) மதிப்பீட்டு தொகை ரூ.6.30/– இலட்சத்திற்கு திரு.கே.இராஜகோபாலன், எண்.20, இராகவனார் தெரு, செங்கல்பட்டு–1. ஒப்பந்ததாரரின் 05.08.2021ம் தேதிய குறைந்த ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் –0.17%க்கு பணியின் அவசர அவசியம் கருதி கால நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்க, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2164/இ2/2021)<br>**தீர்மான எண் : 184 நாள் : 10.09.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | |
|---|---|
| 15 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருக்கள் அனைத்தும் வார்டு மறுவரையறை செய்யப்பட்டதால் வார்டு எண். 1 முதல் 33 வரை உள்ள தெருக்கள் மற்று புதியதாக சேர்க்கப்பட்டுள்ள தெருக்களுக்கு பெயர் பலகை (Sign Board) அமைக்கப்பட வேண்டும் என நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் தெரிவித்ததின் பேரில் முதல் கட்டமாக பிரதான சாலைகளுக்கு பெயர் பலகை அமைக்க ரூ.9,90,000/-க்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூராயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணி மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு :-__<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1480/ 2024/இ1)<br>**தீர்மான எண் : 185 நாள் : 10.09.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 16 | திண்டிவனம் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் டெங்கு தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள விழுப்புரம் மாவட்ட சுகாதார அலுவலர் அவர்களின் ந.க.எண்.2391/அ4/2022 நாள்.14.08.2024-ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு பணியினை மேற்கொள்ள மகளிர் சுய உதவிக் குழு மூலம் 40 DBC பணியாளர்களை கொண்டு விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஊதிய அடிப்படையில் ஒரு பணியாளருக்கு நாளொன்றுக்கு ரூ.400/- என்ற விகிதத்தின் படி 19.08.2024 முதல் 30.09.2024 வரை 43 நாட்களுக்கு பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் - 2024 மற்றும் ஜனவரி, பிப்ரவரி - 2025 ஆகிய 5 மாதங்களுக்கு மட்டும் 60 DBC பணியாளர்களை ஈடுபடுத்திட புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் பணி மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.48.00 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. 19.08.2024 முதல் 30.09.2024 வரை 43 நாட்களுக்கு மட்டும் மகளிர் சுய உதவிக் குழு மூலம் 40 DBC பணியாளர்களை கொண்டு டெங்கு காய்ச்சலை தடுக்கவும் மற்றும் கட்டுப்படுத்திடவும் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தற்போது வட கிழக்கு பருவ மழை தொடங்கிவிட்டதால் டெங்கு, சிக்கன் குனியா மற்றும் வைரஸ் போன்ற நோய்கள் பரவல் காரணத்தினால் நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம். அதற்காகும் தோரய செலவினம் ரூ.48.00 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4144/2022/எச்1)<br>**தீர்மான எண் : 186 நாள் : 10.09.2024**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 17 | அரசாணை எண்.2(டி) எண்.37 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.14.05.1999 மற்றும் அரசாணை(நிலை) எண்.168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (போ–1) நாள்.16.11.2015–ன் படி இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் பொது சுகாதாரப்பிரிவு பணியாளர்கள், பொதுபிரிவு பணியாளர்கள் மற்றும் பொறியியல் பிரிவு சீருடை அணியும் பணியாளர்களுக்கு 2024–2025–ம் ஆண்டிற்கு தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான கோ–ஆப் டெக்ஸ் திண்டிவனத்தில் சீருடை வாங்கி வழங்கவும் மற்றும் அதற்கான தையல் கூலி வழங்கவும் ஆகும் தோராய செல்வினம் ரூ.2,00,000/– (இரண்டு இலட்சம்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br><br>அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று சீருடைகள் வாங்குவதற்கும் மற்றும் அதற்கான தையல் கூலி செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4063/2022/எச்1)<br><br>**தீர்மான எண் : 187 நாள் : 10.09.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 18 | திண்டிவனம் நகராட்சியின் 33 வார்டுகளிலும் திடக்கழிவு முதல்நிலை சேகரிப்பு, தரம் பிரித்து குப்பைகளை உரமாக்கும் பொருட்டு வளமீட்பு பூங்காவில் ஒப்படைத்தல், அதன் அளவீடுகள் அடிப்படையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதல்படி KPI–ன் படி உரிய முறையில் கடந்த 18.05.2023ல் பணி ஆணையினை P&B ENTERPRISES, ERODE என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு 01.06.2023 முதல் பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேற்படி நிறுவனம் நாளது தேதி வரையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் 31.05.2024 உடன் ஓராண்டு நிறைவு பெறுவதால் மேற்படி நிறுவனத்தின் பணியின் தரம் செயல்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இப்பணியானது அத்தியாவசியப்பணி என்பதாலும், நகர் நலப்பணிகள் என்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய ஒப்பந்தப் பணிகளை 01.06.2024 முதல் ஓராண்டுக்கு புதுபித்துக் கொள்ளவும் அதனை செயல்படுத்தப்படுவதற்கான செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது .<br><br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br><br>மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். (ந.க.எண்.196/2023/எச்1)<br><br>**தீர்மான எண் : 188 நாள் : 10.09.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | |
|---|---|
| 19 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு வார்டு 01 முதல் 33 வரை தெருவிளக்குகள் பராமரிப்பு ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் மூலம் ஒப்பந்தமுறையில் பராமரிப்பு பணிகள் மூன்றாண்டுகளுக்கு மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை–28 அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதீப்பீடு தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ.35.14க்கு (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து பதினான்காயிரம் மட்டும்) செயல்படுத்த ந.ம.தீ.எண்.260 நாள்.31.08.2021ல் அனுமதி பெறப்பட்டு உரிய அனுமதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களின் ந.க.எண்.3809/2021 DO1/நாள்.28.06.2021 முதல் Principal Clearance வழங்கப்பட்டும் முதலாண்டிற்கு மதிப்பீட்டு தொகை ரூ 32.36/– இலட்சத்திற்கும் இரண்டாம் ஆண்டிற்கு மதிப்பிட்டு தொகை ரூ.33,97/–மற்றும் மூன்றாம் ஆண்டிற்கு மதிப்பீட்டு தொகை ரூ.35.67 /–இலட்சத்திற்கும் தொழில் நுட்ப அனுமதி வழங்கியும் கடிதம் வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி பணிக்கு 05.08.2021 வரை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.அதில் திரு.எம்/எஸ்.ராம் எண்டர்பிரைசஸ் எண் 218டி/30பி, அருணாச்சலம் காலணி, வடச்சேரி நாகர் கோயில் –1 ஒப்பந்த்தாரர், ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு 16.00 சதவிகிதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை நகர மன்ற தீர்மான எண் 148 நாள்.28.07.2023 அனுமதிக்கப்பட்டு 01.09.2023 முதல் 31.08.2024 வரை வேலை உத்திரவு வழங்கப்பட்டு தற்போது முடிவடைந்துள்ளது.<br>எனவே, தற்போது (01.09.2024 முதல் 30.11.2024வரை ) மதிப்பீட்டு தொகை ரூ.7.89/–இலட்சத்திற்கு திரு.எம்/எஸ். ராம் எண்டர்பிரைசஸ் எண் 218டி/30பி, அருணாச்சலம் காலணி, வடச்சேரி நாகர்கோயில் –1 ஒப்பந்ததாரர் 05.08.2021 தேதிய குறைந்த ஒப்பந்த புள்ளி சதவிகிதம் –16.00 பணியின் அவசர அவசியம் கருதி கால நீட்டிப்பு செய்து வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:–</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்2187/2021/இ2)<br>**தீர்மான எண் : 189 நாள் : 10.09.2024**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 20 | இந்நகராட்சி வார்டு எண்.24ல் மரக்காணம் ரோடு நெடுஞ்சாலை துறை மூலம் அகலப்படுத்தப்படுகிறது இதனால் அந்த பகுதியில் உள்ள 6" பம்பிங்மெயின் மற்றும் 4" குடிநீர் பகிர்மான குழாய் ரோட்டின் நடுவில் உள்ளதை ரோட்டின் விளிம்பு (Boundry) பகுதிக்கு ( 6" D.I PIPE – 400 m + 4" D.I PIPE – 600 m ) மாற்றி அமைக்க வேண்டியுள்ளது அதற்கான மதிப்பீடு ரூ.2500000 /– ( இருபத்தி ஐந்து இலட்சம் மட்டும்) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு:–**</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. SDRF 2024–2025 திட்ட நிதி வரப்பெற்றவுடன் குடிநீர் நிதிக்கு ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 3745/2024/இ2)<br>**தீர்மான எண் : 190 நாள் : 10.09.2024**<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 21 | **33வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.சீ.சின்னசாமி அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம் :–**<br>திண்டிவனம் நகராட்சிக்கு புதியதாக பேருந்து நிலையம் அமைக்க 2010–ல் மாண்புமிகு டாக்டர். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ரூ.675.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து நீதி மன்ற நடவடிக்கைகள் காரணமாக காலதாமதம் ஏற்பட்டு தற்போது மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் மேற்படி இடத்தில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது.<br>திண்டிவனம் நகரில் நவீன பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டியது நகர பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் நீண்ட நாள் கோரிக்கை என்பதாலும் விருப்பத்தினை நிறைவேற்றம் செய்யும் வகையிலும், 2010–ல் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தபோது மேற்படி திட்டம் அனுமதிக்கப்பட்ட காரணத்தினாலும் தற்போது மீண்டும் 25.01.2022–ல் கலைஞரின் மகனும் தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களால் மேற்படி திட்டத்திற்கு அனுமதியளித்துள்ள காரணத்தாலும் நவீன வசதிகளுடன் அமையவுள்ள நவீன பேருந்து நிலையத்திற்கு "**முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்** " என பெயரிட வரப்பெற்றுள்ள கடிதத்தினை அரசின் அனுமதிக்கு அனுப்பி வைத்திட மன்றத்தின் பார்வைக்காக வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :–</u><br>மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது .<br>(ந.க.எண். 02660/2024/எப்1)<br>**தீர்மான எண் : 191 நாள் : 10.09.2024**<br>**33வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.சீ.சின்னசாமி, அவர்களின் கோரிக்கையினை ஏற்று நகரமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையான கருத்தின்படியும், நகரமன்ற தலைவர், நகரமன்ற துணைத்தலைவர் மற்றும் பெரும்பான்மையான நகரமன்ற உறுப்பினர்களின் கருத்தினை ஏற்று புதிய பேருந்து நிலையத்திற்கு "முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்" என பெயர் சூட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை மேல் நடவடிக்கை தொடர அரசுக்கு பரிந்துரை செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.** |

ஒம்/– ஆர். நிர்மலா
தலைவர்
திண்டிவனம் நகர மன்றம்

// உண்மை நகல் //

13/9/2024

ஆணையாளர் (பொ),
திண்டிவனம் நகராட்சி

13/9/2024

# திண்டிவனம் நகராட்சி

## அவசரக் கூட்டம்

## முன்னிலை : திருமதி.ஆர்.நிர்மலா., நகர மன்ற தலைவர்.

10.09.2024 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற உள்ள நகர மன்ற அவசரக் கூட்டப் பொருள் விபரம்.

| வ. எண் | பொருள் விபரம் |
|---|---|
| 1 | **10.09.2024ல் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும் அவசரக் கூட்டத்தின் போது திராவிட முன்னேற்ற கழக நகர அவை தலைவரும், 8வது வார்டு நகரமன்ற உறுப்பினருமான திரு.ஆர்.ரவிச்சந்திரன் மற்றும் நகரமன்ற தலைவர், நகரமன்ற துணைத்தலைவர், திராவிட முன்னேற்ற கழக அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் கூட்டணி கட்சி நகரமன்ற உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம் :-**<br><br>திண்டிவனம் நகராட்சிக்கு புதியதாக பேருந்து நிலையம் அமைக்க 2010-ல் மாண்புமிகு டாக்டர். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ரூ.675.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது. இதனை தொடர்ந்து நீதி மன்ற நடவடிக்கைகள் காரணமாக காலதாமதம் ஏற்பட்டு தற்போது மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் மேற்படி இடத்தில் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது.<br><br>திண்டிவனம் நகரில் நவீன பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டியது நகர பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் நீண்ட நாள் கோரிக்கை என்பதாலும் விருப்பத்தினை நிறைவேற்றம் செய்யும் வகையிலும், 2010-ல் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தபோது மேற்படி திட்டம் அனுமதிக்கப்பட்ட காரணத்தினாலும் தற்போது மீண்டும் 25.01.2022-ல் கலைஞரின் மகனும் தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களால் மேற்படி திட்டத்திற்கு அனுமதியளித்துள்ள காரணத்தாலும் நவீன வசதிகளுடன் அமையவுள்ள நவீன பேருந்து நிலையத்திற்கு "**முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்**" என பெயரிட நகரமன்ற தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களால் கொண்டுவரப்படும் தீர்மானத்தினை அரசின் அனுமதிக்கு அனுப்பி வைத்திட மன்றத்தின் பார்வைக்காக வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு :-<br><br>சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் புதியதாக அமைக்கப்பட்டுவரும் பேருந்து நிலையத்திற்கு "**முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்**" என பெயர் வைத்திடவும், அரசின் அனுமதிக்கு அனுப்பி வைத்திடவும் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br><br>தீர்மான எண் : 192 நாள் : 10.09.2024<br><br>**8வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.R.ரவிச்சந்திரன் அவர்களின் கோரிக்கையினை ஏற்று நகரமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையான கருத்தின்படியும், நகரமன்ற தலைவர், நகரமன்ற துணைத்தலைவர் மற்றும் பெரும்பான்மையான நகரமன்ற உறுப்பினர்களின் கருத்தினை ஏற்று புதிய பேருந்து நிலையத்திற்கு "முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம்" என பெயர் சூட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை மேல் நடவடிக்கை தொடர அரசுக்கு பரிந்துரை செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.** |

| | |
|---|---|
| 2 | **13வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு.M.D.பாபு, அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம் :**<br>திண்டிவனம் செஞ்சி ரோட்டில் உள்ள வட்டார் டேங்க் எதிரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் பழுதான நிலையில் நகராட்சிக்கு சொந்தமான பொருட்களை வைத்து மூடப்பட்ட நிலையில் உள்ளது. அந்த கட்டிடத்தை புதுப்பித்து கலைஞர் நூலகம் அமைதல் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பயன்படுத்தி பலன் அடைவார்கள். எனவே எனக்கு அந்த இடத்தை புதுப்பித்து கலைஞர் நூலகம் அமைக்க அனுமதி வழங்குமாறு கேட்டுகொள்கிறேன். அந்த இடத்திற்கு வாடகை செலுத்தவும் தயாராக உள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மான எண் :** 193 **நாள் :** 10.09.2024<br>**மன்றம் அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/– ஆர். நிர்மலா
தலைவர்
திண்டிவனம் நகர மன்றம்

// உண்மை நகல் //

13/9/2024

ஆணையாளர் (பொ),
திண்டிவனம் நகராட்சி

13/9/2024